செ.வெ.எண்: 22/2021 நாள்: 09.08.2021

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்களின் செய்திக்குறிப்பு!!!**

கொரோனா பெருந்தொற்று நோயினை கட்டுப்படுத்த தமிழ்நாடு அரசு எடுத்துவரும் பல்வேறு நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக அரசாணை எண்.504, நாள் : 07.08.2021-ன்படி தளர்வுகளுடன் ஊரடங்கு 09.08.2021 அன்று காலை 06.00 மணிமுதல் 23.08.2021 காலை 06.00 மணிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது. சமீப காலங்களில் அண்டை மாநிலம் மற்றும் மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் நோய்த் தொற்று அதிகரித்து வரும் நிலையில் மக்களின் வாழ்வாதார பாதிப்புகளை கருத்தில் கொண்டு வழங்கப்பட்ட தளர்வுகள் தவறாக பயன்படுத்தப்படாமல் கண்காணித்து அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை கடுமையாக நடைமுறைப்படுத்த மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட காவல்துறை அலுவலர்கள் ஆகியோருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே, அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்தி கொரோனா மூன்றாம் அலை தொற்றுப்பரவலை கட்டுப்படுத்தும் விதமாக திருப்பூர் மாவட்டத்தில் ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த கீழ்க்கண்ட கட்டுப்பாடுகள் 09.08.2021 காலை 06.00 மணிமுதல் 23.08.2021 காலை 06.00 மணிவரை நீட்டிக்கப்படுகிறது.

- திருப்பூர் மாவட்டத்திலுள்ள அத்தியாவசிய கடைகளான பால் மற்றும் மருந்தகம் தவிர அனைத்து மளிகை கடைகள், காய்கறிக்கடைகள், அடுமனைகள் (பேக்கரி) உள்ளிட்ட பிற கடைகள் அனைத்தும் காலை 6.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை மட்டுமே செயல்பட அனுமதிக்கப்படும்.
- பொது மக்கள் அதிகமாக கூடுவதை தவிர்க்கும் பொருட்டு திருப்பூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வழிகாட்டுத் தலங்களும் வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மூடப்படுகிறது.
- மாவட்டத்திலுள்ள அனைத்து வணிக நிறுவனங்களிலும் கீழ்க்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி செயல்பட வேண்டும்.

1. கைகளை சுத்தம் செய்ய கிருமி நாசினியும், வாடிக்கையாளர்களின் வெப்ப நிலையை அறிய வெப்ப பரிசோதனை கருவி ஆகியவை வணிக நிறுவனத்தின் நுழைவுக்கதவின் முன்பே பரிசோதனை செய்ய வேண்டும்.
2. பணியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருப்பதை நிர்வாகம் உறுதி செய்ய வேண்டும்.
3. அனைத்து கடைகள் மற்றும் வணிக நிறுவனத்தின் கதவுகளும், சாளரங்களும் உரிய காற்றோட்ட வசதிக்காக திறந்து வைத்திருக்க வேண்டும்.
4. வணிக நிறுவனங்களின் முன்பு உரிய சமூக இடைவெளியை பின்பற்றும் வகையில் அடையாளங்கள் குறிக்கப்பட வேண்டும்.
5. அனுமதிக்கப்பட்ட அளவில் மட்டுமே வாடிக்கையாளர்களை வணிக நிறுவனத்திற்குள் ஒரே நேரத்தில் அனுமதிக்க வேண்டும்.

- திருப்பூர் மாநகரத்தில் அமைந்துள்ள கீழ்கண்ட 33 வணிக பகுதிகள் மற்றும் பல்லடம், தாராபுரம், உடுமலைப்பேட்டை ஆகிய நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள கீழ்கண்ட வணிக பகுதிகள் ஆகிய பகுதிகளில் இயங்கும் பால், மருந்தகம், மளிகை கடைகள், மளிகை பொருட்கள் விற்பனை செய்யும் டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோர்ஸ், சிறிய தேநீர் கடைகள், காய்கறிக்கடைகள் மற்றும் உணவுப்பொருட்கள், இறைச்சி, கோழி, மீன் விற்பனை தவிர பிற கடைகள் அனைத்தும் சனி மற்றும் ஞாயிற்றுகிழமைகளில் இயங்க முழுமையாக தடைவிதிக்கப்படுகிறது.

## மாநகராட்சிப் பகுதிகள்

| வ.எண். | வார்டு எண். | சாலையின் பெயர் (முதல் வரை) |
|---|---|---|
| | | **திருப்பூர் மாநகராட்சி மண்டலம் - III** |
| 1. | 31 | குமரன் ரோடு - இரயில் நிலையம் முதல் வளர்மதி பாலம் வரை |
| 2. | 42 | பழைய பேருந்து நிலையம் முதல் தென்னம்பாளையம் போக்குவரத்து சிக்னல் வரை |
| 3. | 45 | மாநகராட்சி அலுவலகம் - போக்குவரத்து சிக்னல் முதல் ஜம்மனை பாலம் மங்கலம் ரோடு வரை |

| | | |
|---|---|---|
| 4. | 45 | நகராட்சி அலுவலகம் ரோடு & காமராஜ் சாலை (வளர்மதி பாலம் முதல் பழைய பேருந்து நிலையம் வரை) |
| 5. | 45 | பெருமாள் கோவில் வீதி, ஈஸ்வரன் கோவில் வீதி |
| 6. | 45 | தாராபுரம் ரோடு சந்திப்பு முதல் ஈஸ்வரன் கோவில் KSC பள்ளி ரோடு வரை |
| 7. | 45 | KSC சந்திப்பு முதல் PRMH அதியமான் தெரு வரை |
| 8. | 45 | KSC சந்திப்பு முதல் காமராஜ் ரோடு சந்திப்பு பழைய மார்க்கெட் தெரு வரை |
| 9. | 45 | புதிய மார்க்கெட் தெரு |
| 10 | 45 | புதிய மார்க்கெட் தெரு சந்திப்பு முதல் சென்னை சில்க்ஸ் துளசிராவ் தெரு 1&2 |
| 11 | 45 | காமராஜ் ரோடு சந்திப்பு முதல் புதிய மார்க்கெட் சந்திப்பு-குள்ளி செட்டியார் தெரு வரை |
| 12. | 45 | சிக்கண்ணா செட்டியர் தெரு - காமராஜ் ரோடு சந்திப்பு முதல் புதிய மார்க்கெட் சந்திப்பு வரை |
| 13. | 45 | விட்டல் தாஸ் தெரு - காமராஜ் ரோடு சந்திப்பு முதல் ராஜன் சில்க்ஸ் சந்திப்பு வரை |
| 14. | 45 | ஷார்மியான் சாகிப் தெரு - காமராஜ் ரோடு சந்திப்பு முதல் புதிய மார்க்கெட் சந்திப்பு வரை |
| 15. | 45 | ஜம்மனை சாலை - புதிய மார்க்கெட் சந்திப்பு முதல் ஜமனை பிரிட்ஜ் வரை |
| 16. | 45 | காமாட்சியம்மன் தெரு - மோகன் லாட்ஜ் முதல் MG புதூர் வரை |
| 17. | 45 | சந்திப்பு MG புதூர் முதல் வீதி கௌரி கிருஷ்ணா ஹோட்டல் முதல் காமட்சியம்மன் கோவில் தெரு சந்திப்பு வரை |
| 18. | 45 | காங்கயம் குறுக்கு சாலை - பழையபேருந்து நிலையம் முதல் CTC கார்னர் வரை |

**திருப்பூர் மாநகராட்சி மண்டலம் - IV**

| வ.எண் | வார்டு எண். | சாலையின் பெயர் (முதல் வரை) | பகுதி |
|---|---|---|---|
| 19. | 52 | வீரபாண்டி மெயின் ரோடு முதல் பள்ளி சந்திப்பு வரை. | வீரபாண்டி பள்ளி |
| 20. | 55 | பல்லடம் ரோடு-வீரபாண்டி பிரிவில் | தெற்கு வட்டார போக்குவரத்து அலுவலகம் அருகில் |

| | | | |
|---|---|---|---|
| 21 | 55 | பல்லடம் ரோடு முதல் நொச்சிப்பாளையம் பகுதி வரை | நொச்சிப்பாளையம் பிரிவு |
| 22 | 52 | வீரபாண்டி காவல் நிலைய பகுதி | பலவஞ்சிபாளையம் |
| 23 | 60 | ஆண்டிப்பாளையம் மங்கலம் ரோடு சந்திப்பு | ஆண்டிப்பாளையம் பிரிவு |
| 24 | 60 | மங்கலம் ரோடு SR நகர் பிரிவு | SR நகர் |
| 25 | 56 | KVR நகர் மெயின் ரோடு முதல் மங்கலம் ரோடு RR தோட்டம் வரை | மைதானம் அருகில் |
| 26 | 56 | KVR நகர் மெயின் ரோடு - மைதானம் சந்திப்பு முதல் செல்லம் நகர் சந்திப்பு வரை | ஜங்சன் அருகில் |
| 27 | 49 | மங்கலம் ரோடு - ABT ரோடு சந்திப்பு முதல் பாரப்பாளையம் ரோடு சந்திப்பு வரை | தண்ணீர் தொட்டி அருகில் |
| 28 | 46 | நஞ்சப்பா பள்ளி ரோடு - நேதாஜி முதல் தெரு, ராயபுரம் பார்க் வரை | காதர் பேட்டை |
| 29 | 46 | காதர் பேட்டை | காதர் பேட்டை |
| 30 | 46 | ராயபுரம் மெயின் ரோடு - பூங்கா முதல் கல்லாம்பாளையம் ரயில்வே இணைப்பு சப்வே வரை | ரவுண்டானா பார்க் |
| 31 | 50 | வெள்ளியங்காடு, 60 அடி ரோடு, முத்தையன் கோவில் முதல் தாராபுரம் ரோடு சந்திப்பு வரை | வெள்ளியங்காடு நால்ரோடு சந்திப்பு |
| 32 | 54 | பல்லடம் ரோடு குப்பாண்டம்பாளையம் பிரிவு | குப்பாண்டம்பாளையம் பிரிவு |
| 33 | 50 | தாராபுரம் மெயின் ரோடு உஷா தியேட்டர் முதல் திருப்பூர் அரசு மருத்துவமனை வரை | அரசு மருத்துவமனை அருகில் |

## நகராட்சிப் பகுதிகள்

| வ.எண். | நகராட்சி | கூட்டம் அதிகமாக கூடும் இடங்கள் |
|---|---|---|
| 1. | பல்லடம் | NGR ரோடு |
| 2. | தாராபுரம் | 1. NN பேட்டை<br>2. பெரிய கடை வீதி, சின்னக்கடை வீதி<br>3. உடுமலை ரோடு (பழைய பஸ் ஸ்டாண்ட் வரை)<br>4. சர்ச் ரோடு,<br>5. ஜவுளிக்கடை வீதி,<br>6. வசந்தா ரோடு (வசந்தா தியேட்டர் வரை) |
| 3. | உடுமலைப்பேட்டை | 1. கல்பனா ரோடு,<br>2. வெங்கட கிருஷ்ணா ரோடு, மற்றும் பசுபதி வீதி,<br>3. ஸ்ரீ னிவாசா வீதி, |

| | | |
|---|---|---|
| | | 4. VOC வீதி,<br>5. கச்சேரி வீதி,<br>6. ராஜேந்திரா ரோடு (காய்கறி தினசரி சந்தை) |

- திருப்பூர் மாவட்டத்தில் செயல்படும் அனைத்து மதுபானக்கடைகள் (டாஸ்மாக்) காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை மட்டுமே செயல்பட அனுமதிக்கப்படுகிறது.
- திருப்பூர் மாவட்டத்திலுள்ள அனைத்து பூங்காக்களிலும் ஞாயிற்றுக்கிழமை மட்டும் பொதுமக்கள் வருகைக்கு தடை விதிக்கப்படுகிறது.
- மாவட்டத்திலுள்ள அனைத்து பன்னடுக்கு வணிக வளாகங்கள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இயங்க தடைவிதிக்கப்படுகிறது. மேலும் வணிக வளாகங்களிலுள்ள உணவகங்களுக்கும் மேலே தெரிவிக்கப்பட்ட நடைமுறைகள் பொருந்தும். (பார்சல் மட்டும் அனுமதிக்கப்படுகிறது)
- மாவட்டத்திலுள்ள உணவகங்கள் அனைத்திலும் காலை 06.00 மணிமுதல் மாலை 05.00 வரை மட்டும் 50% வாடிக்கையாளர்கள் அமர்ந்து உணவருந்த அனுமதிக்கப்படுகிறது. மாலை 05.00 மணிமுதல் இரவு 09.00 மணிவரை பார்சல் சேவை மட்டும் அனுமதிக்கப்பகிறது.
- இறைச்சி மற்றும் மீன் கடைகள் திறந்த வெளியில் தனித்தனி கடைகளாக செயல்படுவதையும் அக்கடைகளில், பொது மக்கள் அதிகமாக கூடாமல் இருப்பதை உள்ளாட்சித் துறையினர் உறுதிப்படுத்தல் வேண்டும்.
- கேரள - தமிழ்நாடு எல்லைகளில் சோதனைச்சாவடிகள் அமைத்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேற்படி சோதனைச் சாவடி வழியாக திருப்பூர் மாவட்டத்திற்குள் வரும் பயணிகள் அனைவரும் 72 மணி நேரத்திற்குள் எடுக்கப்பட்ட RT-PCR சோதனை சான்றில் கொரோனா இல்லை (Negative) சான்று அல்லது கொரோனா தடுப்பூசிகள் இரண்டு தவணைகள் செலுத்தப்பட்டதற்கான சான்று கண்டிப்பாக வைத்திருக்க வேண்டும். இல்லையெனில் சோதனைச்சாவடியிலேயே RT-PCR பரிசோதனை மேற்கொள்ளப்படவேண்டும்.

பொதுமக்கள் அனைவரும் அரசின் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை தவறாது பின்பற்றி நோய்த் தொற்று பரவாமல் தடுப்பதில் மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வீனித்., இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**